திராவிட மாடல் ஆட்சியின் சாதனை

3 ஆண்டுகளில் மட்டும் 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரிப்பு!

அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் தகவல்!

சென்னை, டிச.17-

திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாக கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரித்துள்ளது என்று அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களின் அறிக்கை வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சியின் கீழ் ஆவின் நிறுவனத்தின் சாதனையாக கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை மெட்ரோ மூலமாக சுகாதாரமான முறையில் தரம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் சுமார் 200 வகையான பால் உபப்பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. பால் விற்பனையில் தமிழகத்தின் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2019-2020ஆம் ஆண்டில் சுமார் 23 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் பால் விற்பனை தற்போது 2024-2025இல் சுமார் 7 இலட்சம் லிட்டர் அதிகரித்து 30 இலட்சம் லிட்டர் அளவில் விற்பனையை அதிகரித்துள்ளது.

மேலும் அனைத்து மாவட்டங்களின் புற நகர்ப் பகுதிகளில் ஆவின் பால் விற்பனையை அதிகரிக்கத் திட்டமிடப் பட்டு அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் உடல் நலத்திற்கு ஏற்றவாறு வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்டு அனைவரும் விரும்பும் வகையில், புதிய வகையான கிரீன் மேஜிக் ப்ளஸ் பால் சோதனை அடிப்படையில் சில ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப் பட உள்ளது.

பொதுமக்கள் விருப்பத்திற்கு இணங்க அனைத்து தனியார் நிறுவனத்தின் விற்பனை விலையைக் காட்டிலும் குறைவான விலையில் ஆவின் நிறுவனம் பால் விற்பனை செய்து வருகிறது.

புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட பால் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப விற்பனை செய்யப்படும். மேலும், தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் அனைத்து வகையான பாலின் விற்பனை அளவை குறைக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, ஆவடி பணிமனையிலிருந்து ஆரணி வரை இயக்கப்பட்டு வந்த தடம் எண்.580 பேரூந்தை புதுவாயல் கூட்டுச்சாலை வரை நீட்டித்து கொடியசைத்து மாவட்ட அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திசேகர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மு.பகலவன் ஜெ.மூர்த்தி மு.கதிரவன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடாசலபதி பா.செ.குணசேகரன் டாக்டர்.பரிமளம் விஸ்வநாதன் மாநில நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் வெ.அன்புவாணன் கன்னிகை.ஜி.ஸ்டாலின் ஒன்றியச்செயலாளர்கள் கே.வி.ஆனந்தகுமார், பி.முத்து, நா.செல்வசேகரன் ஆ.சத்தியவேல் கா.சு.ஜெகதீசன் ஜான்(எ)பொன்னுசாமி ந.பரிமளம் இரா.அறிவழகன் அபிராமி குமரவேல் க.சு.தமிழ்உதயன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் போக்குவரத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

மா.பா. அன்புதுரை முன்னிலை! ப.மகேஷ் தலைமையில்

113வது வட்டக் கழகம் சார்பில் எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

நே.சிற்றரசு, சென்னை அரங்கநாதன், ரிஷி சந்தோஷ், அன்பகம் கலை, நா.எழிலன் சிறப்புரை!

சென்னை, டிச.17-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் ராமா தெரு, நுங்கம்பாக்கத்தில் இன்று (17.12.2024 - செவ்வாய்க்கிழமை) 113வது வட்ட கழக செயலாளர் நுங்கை ப.மகேஷ் தலைமையில் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை முன்னிலையில் நடைபெறுகிறது.

விழாவில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, தலைமை கழக பேச்சாளர்கள் சென்னை அரங்கநாதன், ரிஷி சந்தோஷ், தி.மு.க. தலைமை இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா.எழிலன், தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்ட கழக செயலாளர், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் (ம) துணை அமைப்பாளர்கள், 113வது வட்ட இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை: 113வது வட்ட கழக பொருளாளர் பி.டி.சி. ஆர்.வெங்கடேசன்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! இன்று (17-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

வ. எண்	வட்டம்	தலைமை	இடம்	சொற்பொழிவாளர்கள்
1	100வது	ஆ.ஏகாம்பரம் வட்டக் கழக செயலாளர்	டெய்லர்ஸ் சாலை, ஈகா திரையரங்கம் அருகில்	பவானி கண்ணன் தலைமைக்கழக பேச்சாளர் கீர்த்தனா தலைமைக் கழக இளம் பேச்சாளர்
2	113வது	ப. மகேஷ் வட்டக் கழக செயலாளர்	ராமா தெரு நுங்கம்பாக்கம், சென்னை-34	சென்னை அரங்கநாதன் தலைமைக்கழக பேச்சாளர் ரிஷி சந்தோஷ் தலைமைக் கழக இளம் பேச்சாளர்
3	114வது	கே. கோபி வட்டக் கழக செயலாளர்	சி.என்.கே. சாலை சேப்பாக்கம் சென்னை-5	வழக்கறிஞர் மதிவதனி துணை பொதுச்செயலாளர் திராவிடர் கழகம் மாறன் தலைமைக் கழக இளம் பேச்சாளர்

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நே. சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

ஆ.ஏகாம்பரம் தலைமையில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

அண்ணாநகர் 100வது வட்ட தி.மு.க. சார்பில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் கார்த்திக் மோகன் சிறப்புரை!

சென்னை, டிச. 17 -

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 100 வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (17.12.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, டெய்லர்ஸ் ரோடு, ஈ.கா.திரையரங்கம் அருகில் நடைபெறுகிறது.

100 வது வட்டக் கழகச் செயலாளர் ஆ.ஏகாம்பரம் தலைமை வகிக்கிறார்.

100 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், இரா.இளங்கோவன், எஸ்.ஜெயகாந்த், ஆ.ஐயப்பன், பி.கி.கைலாசம், இரா.சாந்திபாய், பா.உதயகுமார், கண்.ஏழுமலை, பி.பாண்டியன், எஸ்.வெங்கடேசன், எல்.பாஸ்கர், என்.வீரமணி, பி.பொன்முடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா, பவானி கண்ணன், கீர்த்தனா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே என்.ஆனந்த், ராணி ரவிச்சந்திரன் எம்.சி., மாவட்டக் கழக நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, வட்டக் கழகச் செயலாளர்கள் கு.பாபு, க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெய் சங்கர், அருண் கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெட்டில்டா கோவிந்தராஜ், புஷ்பலதா ஜெய்சங்கர் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

100 வது வட்டக் கழக துணைச் செயலாளர் ஜி.மணிவண்ணன் நன்றி கூறுகிறார்.

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி, 112அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் மு.மோகன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு நல உதவிகள் வழங்கி உரையாற்றினார். இதில் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, இளம் பேச்சாளர் சாய் ரித்திக் சக்திவேல், மாவட்ட நிர்வாகிகள் ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, வி.எஸ்.கலை, எம்.டி.ஆர்.நாதன், மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர்.விஜய், எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், டி.எஸ்.ராஜா, திருமலை பொன்னுரங்கம், யோகேஸ்வரி சுந்தரேசன், ரங்கராஜ், ச.அசோக்குமார், மு.சீனிவாசன், மேற்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி – வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளுக்கு உட்பட்ட பகுதி/அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நேருநகர் எஸ்.பாட்சா தலைமையில் இரா.துரைராஜ் முன்னிலையில்

சைதை 172-வது வட்டத்தில் உதயநிதி உதயநாள் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - வேங்கை சந்திரசேகரன், கைர் எஸ்.திவ்யா சிறப்புரை!

சென்னை, நவ. 17 -

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172-வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் தெருமுனைக் கூட்டம் நாளை (18.12.2024) மாலை 6 மணிக்கு நேருநகர் கருமாரியம்மன் கோயில் அருகில் வட்டச் செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா தலைமையில் நடைபெறுகிறது - இக்கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ், இ.முருகேசன், க.உமாபதி, வே.முருகன், ஜி.யோவான், ஜி.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.வி.ஜோய், எஸ்.ஆசிக்அலி, உ.திருவேங்கடம், இ.ஹேமலதா, எல்.பரமன், இரா.மலர்விழி, டி.அன்பு, எம்.பி.சகாதேவன், என்.கே.வெங்கடேசன், பொன்.அனுமந்தன், எஸ்.அசோக்குமார், மோ.குமரவேல் ஆகியோர் வரவேற்கின்றனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், கழகப் பேச்சாளர்கள் வேங்கை சந்திரசேகரன், கைர் எஸ்.திவ்யா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், பரிதி இளம்சுருதி, சைதை சம்பத், மின்னல் கந்தப்பன்,தா.மோகன்குமார்,: ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி,, வட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.செந்தில், நா.ராதா கிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, சைதை கிழக்கு பகுதி மாவட்ட பிரதிதிகேள் : வே.ரமேஷ்குமார், டி.வி.நரசிம்மன், என்.நந்தகோபால், எஸ்.ராதாக்கிருஷ்ணன், எஸ்.ஜெ.சலாம், இரா.சுதாபிரியன், கோட்டூர் கோ.சண்முகம் மற்றும், கோட்டூர் பிரகாஷ், ஏ.மஜித், கேட்டூர் ந.பாபு, கே.எம்.எஸ்.கணேசன், மு.மகேஷ் லாரண்ஸ், க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன், ஜ கே.பாலா, தி.கோகுலன், ஸ்ரீசுல எஸ்.ஜெயராமன், பூ.ஜெயவேல், ஆர்.ரவிமூர்த்தி, எஸ்.சம்பத்குமார், ஆரேகுமார்,, ஆர்.சரவணன், மு.செல்வம், டி.ஏ. பீட்டர், த.தினகர்,தி.சத்யேந்திரன், வி.மகேஷ்வரன், மு.ரமேஷ், ஜெ.சின்னதுரை, வீ.நவீன்குமார், க.உசேன், டி.டி.அரசு, ஏ.மகாலிங்கம், எல்.முருகன், எம்.அப்துல்ரஹ்மான், எஸ்.சரவணன், ப.தமிழ்மணி, அப்துல்அமீஸ், எஸ்.சரவணன், ப.தமிழ்மணி, கோ.பாஸ்கரன், துரை பிரபாகரன், ஜி.ஆறுமுகம், முகம்மது ரபீக், உராமக்கிருஷ்ணன், மு.வெங்கடேசன், கௌஸ்ஷரிப், கி.ரமேஷ், வி.அரிக்கிருஷ்ணன், என்.தாமோதரன், பி.பரபு, சி.ஜெயராமன், கௌரிசங்கர், இ.தயாளன், ஆர்.சுப்பிரமணி, என்.சேகர்,

எலிசமெத்ராணி, சு.உமா, ஆர்.ராஜன்பாபு, எம்.சங்கரி, ச.மீனா, எஸ்.லோகிதாஸ், எஸ்.ஆர்.விநாயகம், ஆர்.சுப்பிரமணி, அ.பரமசிவம், பூ.பீம்ராஜ், ஆர்.ராஜசேகர், பாலாஜி, கோ.மோகன்தாஸ், எஸ்.லோகனாதன், ப.நித்யானந்தம், எம்.டி.நீலகண்டன், செல்வக்குமார், கே.டில்லி முகமது, காசிம் ரியாஸ், ஆர்.பாஸ்கர், திருப்பதிராஜ், சதீஷ், சாகுல்அமீது, சுல்தான்பாஷா, செண்பகப் பாண்டியன், எத்திராஜ், இ.தாமு, தா.பாலா, ஆர்.வேலு, என்.லோகனாதன், கே.ராமச்சந்திரன், பி.மாரியப்பன், எம்.அராபதி,சி.மகேஷ், எம்.சிவகுமார், ப.கிருஷ்ணமூர்த்தி, அருள்செல்வம், கணபதி பிரகாஷ், த.கே.த.வெங்கடேசன், எஸ்.ராஜேந்திரன், பி.பி.நாகராஜ், டி.வழிவிட்டான், எஸ்.உமா, ஜி.குணசேகரன், ஆர்.சக்திவேல், எம்.நாராயணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டக் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.டி.சங்கர் நானா ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதி, புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் பயின்று வரும் 200 மாணவ–மாணவியருக்கு புத்தகப் பை, நோட்டு உள்ளிட்ட கல்விச் சாதனங்கள் மற்றும் விளையாட்டு உபரகரணங்களை வழங்கினார்.

சென்னை மாநகராட்சியில் மருத்துவ - சுகாதாரப் பணியாளர்களுக்கு

மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக் காட்டிக் கருவிகள்!

மேயர் பிரியா வழங்கினார்!

சென்னை, டிச. 17-

மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மேயர் ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக்காட்டிக் கருவிகளை (Laptop with LCD Projector) நேற்று வழங்கினார்.

மேயர் ஆர்.பிரியா, மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு மருத்துவம் குறித்து பயிற்சி அளிக்க ஏதுவாக மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக்காட்டிக் கருவிகளை (Laptop with LCD Projector) இன்று (16.12.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொதுசுகாதாரத் துறையின் சார்பில், நோய்த்தடுப்பு சிகிச்சை வசதிகள் மற்றும் பொதுமக்களை மையப்படுத்திய பல்வேறு சேவைகள், பூச்சித்தடுப்பு நடவடிக்கைகள், பல்வேறு தேசிய நலத்திட்டங்கள், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் வீடற்றோர்களுக்கான காப்பகங்கள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மேயர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு மருத்துவம் குறித்து பயிற்சிகள் அளிப்பதற்காக மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக்காட்டிக் கருவிகள் (Laptop with LCD Projector) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களிலும் செயல்பட்டு வரும் நகர்ப்புர சமுதாய நலமையங்கள் (UCHC), நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC) மற்றும் சுகாதார நல வாழ்வு மையங்களில் (UHWC) பணிபுரியும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தாய் சேய் நலம், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை மற்றும் ஆய்வக நடைமுறைகள் போன்ற பணிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. பயிற்சி அளிக்க வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், இப்பயிற்சியை மண்டல அளவிலேயே சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர் மூலம் அளிக்கப்பட உள்ளது.

இவ்வாறான பயிற்சிகள் அளிக்க ஏதுவாக 1 முதல் 15 வரையிலான மண்டலங்களுக்கும் ரூ.30 இலட்சம் மதிப்பில் மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக்காட்டிக் கருவிகள் (Laptop with LCD Projector) கொள்முதல் செய்யப்பட்டு இன்று மேயர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதன் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர்ப்புர சமுதாய நல மையங்கள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார நலவாழ்வு மையங்களின் மருத்துவ தரம் உயர்த்தப்படுவதுடன், ஏழை, எளிய மக்கள் உயர்தர மருத்துவ சிகிச்சை பெற இயலும்.

சென்னை தென்மேற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச மருத்துவ முகாம் மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் எம் எஸ் சரவணகுமார் ஏற்பாட்டில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம் எல் ஏ. ,திருமதி என்.வி.என்.கனிமொழி சோமு எம்.பி, டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே ஏழுமலை எம்.சி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு மணி வட்டக் கழக செயலாளர் எஸ்.லட்சுமி காந்தன், பி மாரி, என். துரை, ஜி.பி செந்தில் குமரன், மாவட்ட மருத்துவர் அணை நிர்வாகிகள் டாக்டர்கள் ஜெ.அருண், சக்தி கணேஷ், விவேகானந்தன் ஜவகர், நிவேதா, ஜனனி, லாவண்யா முருகவேல், மாறன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.